உழவர்களுக்குக் கிடைக்க முடியாத நிலைமை ஏற்படும். எனவே இந்த வினாவில் குறிப்பிட்டவாறு கடந்த ஆண்டில் பெருமழை என்பது அவ்வளவாக இல்லை. அதிகமாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அரசுக்கு அதிகாரிகள் செயற்குறிப்பு அனுப்பவும் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 171, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர்.

171—

வணிக நலவாரியம் அமைத்தல்

***33721—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை :**

மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வணிக நலவாரியம் அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

முற்பகல் 10.25

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரிகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கன்னியாகுமரி மாவட்டதிற்கு என்று தனியாக வணிக நல வாரியம் ஏதும் அமைக்கப்படவில்லை. தமிழகம் முழுவதற்கும் ஒட்டுமொத்தமாக வணிகர் நல வாரியம் அமைக்கப்பட்டு தமிழகத்தில் செயல்பட்டு வருகிறது.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிகர்களுக்கும் அரசுக்கும் நல்ல உறவை வளர்த்துக் கொள்ள மாவட்டந்தோறும் வணிகர் நல வாரியத்தின் கிளைகள் ஆரம்பிக்கப்படுமா அல்லது மாவட்டந்தோறும் ஆலோசனைக் குழு அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியாக வணிகர் நல

வாரியம் அவசியமற்றது. தமிழகம் முழுவதற்கும் ஒட்டுமொத்தமாக வணிகர் நல வாரியம் இப்போது செயல்பட்டு வருகிறது. அதே நேரத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட அளவில் விற்பனை வரி ஆலோசனைக் குழு ஒன்று மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஏற்கெனவே அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில வணிகர் நல வாரியம் வணிகர்களுக்கு எந்தெந்த வழிகளில் உதவிகள் செய்து வருகின்றது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள வணிகர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு கீழ்க்கண்ட வகையில் உதவிகள் செய்வதற்கு திட்டமிடப்பட்டு செயல்பட்டு வருகிறது. இருதய அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீரக அறுவை சிகிச்சை ஆகியவற்றுக்கு மருத்துவ சான்றிதழின் பேரில் ரூ. 20 ஆயிரம் வழங்கப்படுகிறது. வாரியத்தின் உறுப்பினராக உள்ள பொருள் ஈட்டும் நபர் இறந்துவிட்டால் அவரது குடும்பத்திற்கு குடும்ப நல நிதி ரூ. 20 ஆயிரம் வழங்கப்படுகிறது. நலிவுற்ற உறுப்பினர்களின் குழந்தைகள் கல்வியை தொடர்ந்து முடிக்க உதவிகள் செய்யும் வகையில், பாலிடெக்னிக், கலைக் கல்லூரி அல்லது அதற்கு சமமான கல்விப் படிப்பு முடியும் வரையில் ஆண்டு ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. முதுநிலை படிப்பு, தொழில்கல்வி அல்லது அதற்கு சமமான கல்விப்படிப்பு முடியும் வரை ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூபாய் இரண்டாயிரம் வழங்கப்படுகிறது. உடல் ஊனமுற்ற வாரிய உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு மூன்று சக்கர வண்டி வழங்கப்படுகிறது. இது தவிர, வருமான வரி செலுத்தும் வாரிய உறுப்பினர்கள் உட்பட அனைத்து உறுப்பினர்களுக்கும் கீழ்க்கண்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. பத்தாம் வகுப்பில் மற்றும் பனிரெண்டாம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெறும் மாணவ மாணவியர்களுக்கு ரூபாய் 5 ஆயிரமும், இரண்டாம் மதிப்பெண் பெறும் மாணவ மாணவியர்களுக்கு ரூபாய் மூன்றாயிரமும், மூன்றாம் மதிப்பெண் பெறும் மாணவ மாணவியர்களுக்கு ரூபாய் இரண்டாயிரமும் வழங்கப்படுகிறது. விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிபெறும் உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கீழ்க்கண்டவாறு பரிசுகள் வழங்கப்படும். சர்வதேச அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு ரூபாய் 25 ஆயிரமும், அகில இந்திய அளவில் நடைபெறும் போட்டிகளில்

வெற்றி பெறுபவர்களுக்கு ரூபாய் 10 ஆயிரமும், மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றிபெறுபவர்களுக்கு ரூபாய் 5 ஆயிரமும் வழங்கப்படும் என தீர்மானிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 172, திருமதி ப. சரஸ்வதி, இருக்கையில் இல்லை. திரு. எஸ். அன்பழகன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

172—

கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கழிவுநீரைச் சுத்திகரித்தல்

***33411**—திருமதி ப. சரஸ்வதி:*

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மோகனூரில் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கழிவு நீரை சுத்திகரிக்க என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையிலிருந்து வெளியேற்றப்படும் தொழிற்சாலை கழிவுநீர் அதற்கென அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையத்தில், தமிழ்நாடு மாசு கட்டுப் பாட்டு வாரியத்தினால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வரையறைகளுக்கு உட்பட்டு சுத்தம் செய்யப்பட்டு, ஆலையில் விவசாயப் பண்ணைக்கும், கரும்பு விவசாய நிலங்களுக்கும் நில சொந்தக்காரர்களின் ஒப்புதலோடு பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதி கபிலர் மலை தொகுதியிலும் எனது நாமக்கல் தொகுதியிலும் வருவதால், அந்தப் பகுதியில் சர்க்கரை ஆலையை ஒட்டி பல கிராமங்கள் இருக்கின்றன. பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. பல அரசு அலுவலகங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலையில், சுத்திகரிக்கப்பட்ட நீர் அந்தக் கிராமங்களைத் தாண்டி வருகிறதா அல்லது அந்த சர்க்கரை ஆலையை ஒட்டியே பயன்படுத்தப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.